3. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ். ஜெயக்குமார், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1993-94 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 22 மற்றும் 23-வது அறிக்கைகளை, குழுவின் சார்பாக, பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு. 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவு, அறிமுகம் செய்தல், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள், தனி அலுவலர்கள் நியமன திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.